**கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபை- 2010**

---

## 1 நிதிசார்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப்பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் எனது இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிசார் கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத்தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதிச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இ.க.நி 24 இன்படி குறித்தொதுக்கிய அடிப்படையயில் இழப்பீடு வழங்குவதற்கே குறிபப்பிட்ட தொடர்புடைய செலவினை சரிசெய்தற்கு அவசியமான காலத்தில் அரசாங்க மானியம் வருமானமாகப் அங்கிகரிக்கப்படவேண்டும். எவ்வாறாயினும், 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ரூபா 110,672,184 தொகையான மூலதனச் செலவிற்கான அரசாங்க மானியப் பெறுவனவு நேரடியாக பங்குடமையாளரின் அக்கனற்க்கு எடுக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலையான சொத்துக்களின் பெறுமானத் தேய்வுக் கொள்கை 2009 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்த போதிலும் இ.க.நி 10 இன்படி 2010 ஆம் ஆண்டிற்கான நிலையான சொத்துக்களின் புதிய பெறுமானத் தேய்வுக் கொள்கையின்படி முன்னைய ஆண்டு தொடர்பான சீராக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) நிதிக் கூற்றுக்களில் தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை

(ஈ) இ.க.நி 16 மற்றும் 42 இன்படி பின்னைய ஊழியர் நலன்பேனல் பொறுப்பு தகைமையுடைய நடுகணிப்பீட்டாளரை பயன்படுத்தி அல்லது பணிக்கொடை வாய்ப்பாடு முறையைப் பயன்படுத்தி செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும், பணிக்கொடைப் பொறுப்பு மேற்குறிப்பட்ட வேண்டுகையுடன் கணிப்பிடப்பட்டிருக்கவிலல்லை.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது 15 சோளப்பயிர் காப்புறுதிகள் தொடர்பில் செய்யப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகளில் ரூபா 58,440 ஆன மேலதிகக் கொடுப்பனவுகள் அவதானிக்கப்பட்டன.

| பகுதி | கொடுப்பனவுகளின் எண்ணிக்கை | செலுத்த வேண்டிய தொகை | செலுத்திய தொகை | மேலதிகக் கொடுப்பனவு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| ஹகடகஸ்தெகிலியா | 02 | 16,800 | 28,500 | 11,700 |
| மிகிந்தலை | 01 | 4,500 | 8,000 | 3,500 |
| கலன்பிந்துனுவேவ | 01 | 11,700 | 20,250 | 8,550 |
| நொச்சியாகம | 03 | 17,350 | 33,600 | 16,250 |
| ஹொறவப்பொத்தானை | 08 | 36,750 | 55,200 | 18,440 |
| மொத்தம் | 15 | 87,110 | 145,550 | 58,440 |

### 1.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னேற்ற அறிக்கையின்படி, காப்புறுதி தவணைக் கட்டணங்களிருந்து பெறப்பட்ட வருமானம் ரூபா 105,484 மில்லியனாகும் அதேவேளை நிதிக் கூற்றுக்களின்படி இது ரூபா 105,063 மில்லியனாக இருந்தமையால் ரூபா 0.421 மில்லியன் வித்தியாசம் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களின்படி, வருமானக் கூற்றிற்கு சாட்டுதல் செய்யப்பட்ட ஊ. சே. நி மற்றும் ஊ.ந.நி பங்களிப்புக்கள் முறையே ரூபா 3,885,009 மற்றும் ரூபா 906,278 ஆக இருந்தன. அதேவேளை ஊ. சே. நி கணிப்பீட்டிற்காக கருதப்பட்ட மேற்குறித்த தொகையைப் பெறுவதற்கான கருத்திற் கெடுக்கப்பட்ட சம்பள தொகை ரூபா. 32,375,079 மற்றும் ஊ.ந.நி கணிப்பீட்டிற்காக ரூபா 30,209,271 ஆகும். ஊ. சே. நி மற்றும் ஊ.ந.நி இன் கணிப்பீட்டிற்காக எடுக்கப்பட்ட சம்பள வித்தியாசத்திற்கான காரணங்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஊழியர் கடன்கள் மற்றும் முற்பணங்கள் என்பவற்றிலிருந்து பெறவேண்டிய ரூபா 1,315,578 கூட்டுமாத்த தொகையான மொத்த மீதிகள் நீண்ட காலமாக அறவிடப்படாமல் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்குகளில் மீதியாக இருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| | ரூபா |
|---|---|
| இடர் கடன்கள் | 919,095 |
| பண்டிகை முற்பணங்கள் | 46,800 |
| விசேட முற்பணங்கள் | 9,300 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | 285,322 |
| விசேட பதவியினர் கடன்கள் | 4,800 |
| சம்பள முற்பணங்கள் | 50,261 |
| | 1,315,578 |

(ஆ) ரூபா 51,543 தொகையாக பெறவேண்டிய சில்லறைக் கடன்பட்டார் மீதிகள் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு ஆண்டிற்கு மேலாக தீர்க்கப்படாமல் இருந்தது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 432,950 தொகையான காப்புறுதியாளர்களிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் பெற்றுக்கோடல்கள் கிடைக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதி செய்யமுடியவில்லை.

### 1.2.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 26(ஏ)ஆம் பிரிவால் திருத்தப்பட்ட 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர்வரி அதிகாரச்சட்டம் | ரூபா 452,928 தொகையான பிடித்துவைத்தல் வரியின் $^{1}/_{3}$ பங்கான பெறுமதி சேர்வரி வாடகைக் கொடுப்பனவுகளிலிருந்து கழிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2006 ஒக்டாபர் 5 ஆந் திகதிய 6 ஆம் இலக்க சுற்றறிக்கையால் திருத்தப்பட்ட 2006 சனவரி 25 ஆந் திகதிய 8 ஆம் இலக்க தேசிய கொள்வனவு முகவராண்மையின் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகள் | ரூபா 100,000 இற்கு அதிகமான வாகன திருத்தச் கிரயம் வரிசை அமைச்சு செயலாளர் அங்கீகாரத்துடன் செலுத்தப்பட வேண்டிய போதிலும் ரூபா 135,000 கிரயத்திலான வாகனத் திருத்தத்திற்காக அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணங்கள் | |
| (i) நி.பி 104(2) | 6 வாகனங்கள் தொடர்பான விபத்துக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 110 | இழப்புக்களிற்கான பதிவடு பேணப்பட்டிருக்கவில்லை |

| | | |
|---|---|---|
| | (iii) நி.பி. 371(2) பீ | 1999 முதல் 2010 ஆம் வரையான காலத்தின் போது செலுத்தப்பட்ட ரூபா 530,798 தொகையான நானாவித முற்பணங்கள் மற்றும் எரிபொருள் முற்பணங்கள் 2011 மார்ச் 31 வரையிற் கூட தீர்ப்பனவு செய்யப்பட் டிருக்கவில்லை |
| | (iv) நி.பி 1645 | வாகன சம்பவ குறிப்பு புத்தகம் வேண்டப்பட்டவாறு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| | (v) நி.பி 1646 | 36 வாகனங்கள் தொடர்பான வாகன ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த செயலாற்றல் பொழிப்புகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) நி.பி 1647 (அ) | வாகனங்களின் வருடாந்த கணிப்பீட்டு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/2 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | கணனிகள் மற்றும் துணைப் பாகங்களின் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை |
| (உ) | 2006 பெப்ரவரி 14 ஆந் திகதிய 2/1/எவ்/25 ஆம் இலக்க கமத்தொழில் கமநல மற்றும் காப்புறுதிச் சபை சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது உத்தியாகத்தர்களிற்கு செலுத்தப்பட்ட ரூபா 233,900 தொகையான முற்பணங்கள் 14 நாட்களிற்குள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

**1.2.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 36 சோளப் பயிர் காப்புறுதி தொடர்பில் மோசடியான ஆவணங்களில் ரூபா 262,900 கூட்டுமொத்தத் தொகையான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) நெல் காப்புறுதி தொடர்பில் தகவல்கள் பூர்த்தியாக்கப்படாத விண்ணப்பங்களில் ரூபா 318,040 கூட்டுமொத்தத் தொகையான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) ரூபா 135,753 கூட்டுமொத்தத் தொகையான நெல் காப்புறுதி தொடர்பான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், பயிர்ச்செய்கைத் திகதி காப்புறுதி திகதிக்குப் பின்னரான திகதியாகவுள்ளன.

(ஈ) ரூபா 77,575 கூட்டுமொத்தத் தொகையான நெல் காப்புறுதி தொடர்பான இடைக்காலக் கொடுப்பனவுகள் அங்கீகரித்த பயிர்ச்சய்கைத் திகதியை அடுத்த நாளில் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 2 நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

#### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின்படி, 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிர்வாகச் செலவினங்களிற்கான அரசாங்க மானியத்தினை கணக்கிற்கு எடுக்க முன்னர் ரூபா 149,328,371 ஆன தேறிய பற்றாக்குறைக்கெதிராக முன்னைய ஆண்டிற்கான ரூபா 73,276,670 நேரொத்த செயற்பாட்டு மிகையை விளைந்திருந்தது. நிர்வாக மற்றும் நிதிச் செலவினங்களைச் செய்வதற்கு மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 86,141,294 ஆன அரசாங்க மானியம் மற்றும் வருமானம் ரூபா 86,589,528 என்பவற்றை கணக்கிற்குள் எடுத்த பின்னர் ஒட்டு மொத்த பற்றாக்குறை ரூபா. 149,776,605 ஆகும். அதனை முன்னைய ஆண்டிற்கான ரூபா 67,747,480 ஆன ஒட்டு மொத்த நேராத்த மிகையுடன் நிதிசார் விளைவுகளில் ரூபா 217,524,085 ஆன வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

#### 2.1.2 சபையின் தொடர்ந்தியங்கும் தன்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நெல், கால்நடைகள் மற்றும் துணைப்பயிர் காப்புறுதி திட்டங்கள் தொடர்பில் பாரிய செலவினம் ஏற்பட்டிருந்ததுடன் இது சபையின் செயற்பாட்டு விளைவுகளை பாரியளவில் பாதித்திருந்ததென அவதானிக்கப்பட்டது. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| | காப்புறுதி திட்டங்கள் | வருமானம் | மொத்த செயற்பாட்டுச் செலவினம் | வருமானத்தின் சதவீதமாக செயற்பாட்டுச் செலவினம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | & |
| (i) | நெல் | 53,009,967 | 179,229,396 | 338.0 |
| (ii) | கால்நடைகள் | 11,467,977 | 11,435,121 | 99.7 |
| (iii) | சுவசெத | 9,724,658 | 1,418,054 | 14.6 |
| (iv) | துணைப்பயிர் | 26,521,732 | 81,236,620 | 306.3 |
| (v) | விவசாய உபகரணங்கள் | 1,182,106 | 48,205 | 4.1 |

(ஆ) 2011 ஆம் ஆண்டில் முற்பகுதியில் ஏற்பட்ட போழிவு நிலைமைக்காக 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகளிற்காக ரூபா 259 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சபையில் கிடைக்கக் கூடிய நிதிகள் ரூபா 243 மில்லியனாக மாத்திரம வரயறுக்கப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் எழுகின்ற பேரழிவுகளிற்காக பொறுப்பு கொடுப்பனவுகளில் இது மாறுதலையான நிலைமையை ஏற்படுத்தலாம்.

### 2.1.3 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

(அ) முன்னைய 5 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளின்படி, அரசாங்க மானியத்திற்கு முன்னரான மிகை 2009 ஐ தவிர படிப்படியாக வீழ்ச்சியடைந்திருந்ததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 150 மில்லியன் தேறிய பற்றாக்குறையாக இருந்தது. விபரங்கள் பின்வருமாறுள்ளன.

| | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| மொத்த வருமானம் | 126 | 114 | 96 | 48 | 43 |
| மொத்தச் செலவினம் | 361 | 121 | 134 | 50 | 37 |
| தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (235) | (7) | (38) | (2) | 6 |
| அரசாங்க மானியம் | 85 | 75 | 42 | 12 | 12 |
| அரசாங்க மானியத்தின் பின்னர் தேறிய மிகை/ (பற்றாக்குறை) | (150) | 68 | 4 | 10 | 18 |

சபையானது அதன் செயற்பாடுகளிற்காக அரசாங்க மானியங்களில் தங்கியிருக்கின்றமையை இது காட்டுகிறன

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னை 4 ஆண்டுகளிற்காக வருமானம், இழப்பீட்டுக் காப்புறுதிக் கொடுப்பனவு மற்றும் அவற்றின் மீது ஏற்பட்ட சலவினம் என்பவற்றின் இணக்கம் கீழே காட்டப்படுகின்றது இது சபையின் தொடந்தியங்கும் தன்மை மீதான நிச்சயமின்மையை குறிக்கின்றது.

| ஆண்டு | பெறப்பட்ட தவணைப் பணம் | செலுத்தப்பட்ட கோரிக்கைகள் | செயற்பாட்டுச் செலவினம் | நிர்வாகச் செலவினம் | மொத்தச் செலவினம் | பெறப்பட்ட தவணைப் பணத்தினை விஞ்சிய செலவினம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் | ரூபா மில் |
| 2006 | 34.3 | 8.9 | 3.0 | 24.9 | 36.8 | (2.5) |
| 2007 | 37.5 | 21.3 | 1.5 | 27.5 | 50.3 | (12.8) |
| 2008 | 70.5 | 27.0 | 4.2 | 78.7 | 109.9 | (39.4) |
| 2009 | 83.4 | 31.0 | 5.7 | 84.1 | 120.8 | (37.4) |
| 2010 | 105.1 | 268.7 | 5.6 | 86.3 | 360.6 | (255.5) |

## 2.2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.2.1 காப்புறுதித் திட்டங்களின் நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவலின்படி, மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான காப்புறுதித் திட்டங்களின் பௌதீக மற்றும் நிதிசார் செயலாற்றலை பின்வரும் கூற்று காட்டுகிறது.

| விடயம் | அளவீடு | இலக்கு | | | | எய்தல் | | | | சதவீதமாக எய்தல் (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | | பௌதீக | | நிதிசார் | |
| | | 2009 | 2010 | 2009 ரூபா 000 | 2010 ரூபா 000 | 2009 | 2010 | 2009 ரூபா 000 | 2010 ரூபா 000 | 2009 | 2010 | 2009 ரூபா 000 | 2010 ரூபா 000 |
| 1. பயிர் காப்புறுதி | | | | | | | | | | | | | |
| (அ) நெல் | ஏக் | 65,000 | 60,000 | 49,800 | 48,000 | 46,236 | 65,572 | 33,058 | 53,010 | 71.13 | 109.29 | 66.38 | 110.44 |
| (ஆ) மிளகாய் | ஏக் | 500 | 500 | 700 | 700 | 742 | 194 | 693 | 364 | 148.40 | 38.80 | 99.00 | 52.00 |
| (ஈ) பெரிய வெங்காயம் | ஏக் | 600 | 600 | 1,920 | 1,920 | 479 | 1,021 | 1,626 | 2,719 | 79.83 | 170.17 | 84.69 | 141.61 |
| (உ) தென்னை | ஏக் | 1,500 | 975 | 1,620 | 1,053 | 6 | 10 | 20 | 11 | 0.40 | 1.03 | 1.23 | 1.04 |
| (ஊ) கரும்பு | | 500 | 1,300 | 400 | 3,055 | 29 | 63 | 25 | 377 | 5.80 | 4.85 | 6.25 | 12.34 |
| (எ) சோளம் | ஏக் | 15,000 | 15,500 | 11,250 | 17,050 | 9,542 | 11,101 | 17,089 | 17,977 | 63.61 | 71.62 | 151.90 | 105.44 |
| (ஏ) ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர் | ஏக் | 1,000 | 600 | 2,800 | 1,680 | 159 | 107 | 384 | 239 | 15.90 | 17.83 | 13.71 | 14.23 |
| (ஐ) மலர் தாவரம் | தாவரம் | 280,000 | - | 1,120 | 400 | 1,000 | - | 2 | 6 | 0.36 | - | 0.18 | 1.50 |
| (ஒ) பெருந்தாட்டப் பயிர் | ஏக் | 1,000 | 416 | 2,000 | 832 | 2 | 16 | 5 | 42 | 0.20 | 3.85 | 0.25 | 5.05 |
| (ஓ) உருளைக் கிழங்கு | ஏக் | 200 | 200 | 1,000 | 1,000 | 416 | 518 | 1,873 | 2,095 | 208.00 | 259.00 | 187.30 | 209.5 |
| (ஔ) ஏனைய பயிர் | ஏக் | 1,700 | 900 | 1,300 | 450 | 461 | 2,756 | 360 | 1,985 | 27.12 | 306.22 | 27.69 | 441.11 |
| (ஃ) மரக்கறி | ஏக் | - | 300 | - | 900 | 147 | 521 | 294 | 807 | - | 173.67 | - | 89.67 |
| 2. கால்நடை | | | | | | | | | | | | | |
| மாடு | எண் | 11,000 | 11,000 | 26,950 | 27,500 | 4,708 | 5,631 | 12,134 | 11,334 | 42.80 | 51.19 | 45.02 | 41.21 |
| ஆடு | எண் | 8,000 | 8,000 | 2,640 | 2,500 | 3,895 | 3,219 | 1,509 | 1,436 | 48.69 | 40.24 | 57.16 | 57.44 |
| 3. களஞ்சியங்கள் | எண் | 150 | 1,000 | 1,313 | 5,000 | 96 | 10 | 508 | 178 | 64.00 | 1.00 | 38.69 | 3.56 |
| 4. விவசாய உபகரணம் | எண் | 2,000 | 2,000 | 6,000 | 7,000 | 165 | 454 | 1,036 | 3,225 | 8.25 | 22.70 | 17.26 | 46.07 |
| 5. சுவசெத் | எண் | 50,000 | 40,000 | 17,500 | 16,000 | 23,325 | 20,618 | 9,012 | 8,456 | 46.65 | 51.54 | 51.50 | 52.85 |
| 6. ஆயுள் காப்புறுதி | எண் | 15,000 | 15,000 | 45,000 | 45,000 | 6 | - | 7 | - | 0.04 | 0 | 0.02 | 0 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்காள்ளப்படுகின்றன.

(அ) மிளகாய், தென்னை, கரும்பு, ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், பெருந்தோட்டப்பயிர், மாடுகள், களஞ்சியங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் என்பன தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான பௌதீக இலக்குகள் 50 சதவீதம் கூட எய்தப்பட்டிருக்கவில்லை. தென்னை, கரும்பு, பெருந்தோட்டப்பயிர் மற்றும் களஞ்சியங்கள் காப்புறுதி என்பன 5 சதவீதத்திற்கு குறைவாக மாத்திரமே எய்தப்பட்டிருந்தது.

(ஆ) மிளகாய், தென்னை, கரும்பு, ஏற்றுமதி மற்றும் பல்லாண்டுப் பயிர், பெருந்தோட்டப்பயிர், மாடுகள், களஞ்சியங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் என்பன தொடர்பான காப்புறுதி நடவடிக்கைகள் சம்பந்தமான நிதிசார் இலக்குகள் 50 சதவீதம் கூட எய்தப்பட்டிருக்கவில்லை. தென்னை, மலர்த் தாவரம், பெருந்தோட்டப்பயிர் மற்றும் களஞ்சியங்கள் காப்புறுதி என்பன 10 சதவீதத்திற்கு குறைவாக மாத்திரமே எய்தப்பட்டிருந்தது.

(இ) மிளகாய், ஆடு மற்றும் களஞ்சிய காப்புறுதி தொடர்பான பௌதீக இலக்கின் எய்துதை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது முறையே 109.6 சதவீதம், 8.5 சதவீதம் மற்றும் 63 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஈ) ஆயுள் காப்புறுதி தொடர்பான நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகள் 15,000 எண்ணிக்கை மற்றும் ரூபா 45 மில்லியனாக மதிப்பிடப்பட்ருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது எந்தவொரு நபரும் காப்புறுதி செய்திருக்கவில்லை.

**2.2.2 மனிதவள முகாமைத்துவம்**

தரப்பட்ட தகவல்களின் படி, முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி, உண்மையான ஆளணி மற்றும் வெற்றிட நிலைமை என்பன கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் வகை | அனுமதிக்கப்பட்ட ஆளணி | | | உண்மையான ஆளணி | | | வெற்றிட நிலைமை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **2008.12.31** | **2009.12.31** | **2010.12.31** | **2008.12.31** | **2009.12.31** | **2010.12.31** | **2008.12.31** | **2009.12.31** | **2010.12.31** |
| நிறைவேற்றுனர்கள் | 107 | 45 | 45 | 81 | 41 | 39 | 26 | 04 | 06 |
| நிறைவேற்றுனர் அல்லாதோர் | 200 | 263 | 264 | 157 | 193 | 176 | 43 | 70 | 88 |
| சிற்றூழியர்கள் | 71 | 70 | 69 | 57 | 53 | 60 | 14 | 17 | 09 |
| அமைய | - | - | - | 95 | 144 | 68 | - | - | - |
| மொத்தம் | 378 | 378 | 378 | 390 | 431 | 343 | 83 | 91 | 103 |

2008, 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இருந்த முறையே 83, 91 மற்றும் 103 ஆன வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது

**2.2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின்படி, 7 வாகனங்கள் நீண்ட காலமாகப் பயன்படுத்தப்படாமல் தலைமை அலுவலக வளவில் பயன்பாடின்றி விடப்பட்டிருந்தன.

(ஆ) முழுமையாக பெறுமானத் தேய்விடப்பட்ட ரூபா 382,111 தொகையான பயன்படுத்தப்படாத அச்சிடல் பொருட்கள் மற்றும் ரூபா 451,509 தொகையான உபகரணங்கள் என்பன 1982 இலிருந்து பயன்பாடின்றி இருந்தன.

**2.2.4 கூட்டுத்திட்டம், மற்றும் வருடாந்த நடவடிக்கைத்திட்டம்**

2009 - 2012 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்ட போதிலும் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2003 யூன் 2 இன் பீஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பிரிவின்படி, 2010 ஆம் ஆண்டிற்காக இது நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத் திட்டத்தில் சொல்லப்பட்ட குறித்த சில இலக்குகள் அடையப்பட்டடிருக்காததுடன் இது சபையின் நல்ல ஆளுகைக்கான கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வை நிறுவுதல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஒழுக்கக் கோவை**

பொதுத் திறைசேரியின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2009 ஒக்தோபர் 07 ஆம் திகதிய டிஎம்ஏ/2009(3) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி, உள்ளகக் கணக்காய்வு சாசனம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை சபை திட்டமிட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரித்தபொழுது பின்வரும் உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) இணைப்பு - 2 - செயலாற்றல் நியமங்கள் - இல. 2011 - இடர் முகாமைத்துவம்

(ii) இணைப்பு - 2- செயலாற்றல் நியமங்கள் - இல. 2201 திட்டமிடல் கவனஈர்ப்பு

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டியலிடப்பட்ட பின்வரும் பகுதிகள் மற்றும் நடவடிக்கைகள் மேற்காள்ளப்பட்டிருக்கவில்லை

- (i) சொத்துக்கள்
- (ii) பொறுப்புக்கள்
- (iii) மனிதவள முகாமைத்துவம்
- (iv) சபையின் வாகனங்கள்
- (v) காப்புறுதித் தரகுகள்
- (vi) சபையின் ஒட்டுமொத்த செயலாற்றல்

### 2.2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

2010 ஆம் ஆண்டிற்கான பாதிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினத்திற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்கும் இடையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதால் பாதீடானது முகாமைத்துவ கட்டுப்பாட்டின் பயனுள்ள கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றுடும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

- (அ) காப்புறுதித் திட்டங்கள்
- (ஆ) இழப்பீட்டுக் கொடுப்பனவுகள்
- (இ) உள்ளகக் கணக்காய்வு
- (ஈ) கூட்டுத் திட்டமும் செயல்நடவக்கைத் திட்டமும்
- (உ) பாதீடு
- (ஊ) பதவியினர் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தீர்ப்பனவு
- (எ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்